## ஏக்கருக்கு 50 ஆயிரம்… தூக்கலான வருமானம் கொடுக்கும் தூயமல்லி…!

**25.12.2012**





அதிக மகசூல் என்ற ஒற்றைச் சொல்லால் விவசாயிகளை மயக்கி.. பாரம்பரிய ரகங்களை ஓரம் கட்டி, வீரிய ரகங்களையும், ரசாயன உரங்களையும் தலையில் கட்டியது பசுமைப்புரட்சி! கொஞ்சம் கொஞ்சமாக வீரிய ரகங்களின் வீரியம் குறையக் குறைய.. நிலத்தில் இடப்படும் ரசாயனங்களின் அளவு உயர்ந்துகொண்டே போனது. விளைவு.. யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால், பசுமைப் புரட்சிக்கு முன்பும் சரி.. பிறகும் சரி… பாரம்பரிய ரகங்கள் மகசூலில் குறை வைப்பதே கிடையாது. பல விவசாயிகள், வீரிய ரகத்தைவிட, பாரம்பரிய ரகங்களில்தான் பரம்பரை பரம்பரையாக அதிக மகசூல் அள்ளி வருகிறார்கள் என்பதே நிதர்சனம்!

இத்தகையப் பாரம்பரிய ரகங்களின் பெருமைகளைச் சரியாகப் புரிந்து கொண்ட இயற்கை ஆர்வலர்கள் பலர், அவற்றை விடாமல் தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களில் ஒருவர்… காஞ்சிபுரம் மாவட்டம், வில்லிவலம் கிராமத்தைச் சேர்ந்த தாந்தோணி. இவர், 'தூயமல்லி' ரக நெல்லை இயற்கை முறையில் சாகுபடி செய்து நல்ல வருமானமும் எடுத்து வருகிறார். எங்க அப்பாவுக்கு பூர்விகமாக கிடைத்தது 3 ஏக்கர் நிலம். ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் பாலாறிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, கடுமையாக அந்த நிலத்தில் உழைத்ததில் சம்பாதித்த பணத்தில் 70 ஏக்கர் நிலம் சேர்த்துவிட்டார். கிச்சலி சம்பா, குள்ளங்கார், வெள்ளை பொன்னி என்று பாரம்பரிய ரகங்களைத்தான் அப்பா சாகுபடி செய்வார். நான், 10 வயதிலிருந்தே அப்பாகூட சேர்ந்து விவசாய வேலை பார்க்க ஆரம்பித்தேன். காலையில் ஏர் ஓட்டிட்டுதான் பள்ளிக்கூடத்திற்கே ஓடுவேன். பி.எஸ்.சி பாட்டனி வரைக்கும் படித்துவிட்டு, 300 ரூபாய் சம்பளத்திற்கு வேலைக்கும் சேர்ந்தேன். ஆனால், கொஞ்ச நாட்களிலேயே அதை உதறிவிட்டு. விவசாயம்தான் நமக்கானது என்று திரும்பி வந்துவிட்டேன். வழிகாட்டிய 'ஜீரோ பட்ஜெட்' நான் விவசாயத்தில் முழுமையாக இறங்கின காலத்தில்தான், பசுமைப்புரட்சி அறிமுகமானது. 'கிராம சேவக்' எங்க கிராமத்திற்கும் வந்து ஒட்டு விதைகள், உரங்களைப் பற்றிச் சொன்னதுடன், அதைக் கொடுத்துவிட்டும் போனார். அதைப் பயன்படுத்த ஆரம்பித்தபோது 15 மூட்டை விளைந்த நிலத்தில் 30 மூட்டை கிடைத்தது. பார்க்க பார்க்க சந்தோஷமாக இருந்தது. அதனால், தொடர்ந்து ரசாயன உரங்களை போட ஆரம்பித்தோம். ஆனால் போகப் போக மகசூல் குறைய ஆரம்பித்தது. நான்கு வருடத்திற்கு

முன்புதான் சுதாரித்துக் கொண்டு, இதை எப்படி சரி செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்தேன். எதேச்சையாக மாமனார் வீட்டிற்கு சென்றபோது அவர் ஏக்கருக்கு 40 மூட்டை வெள்ளை பொன்னி ரக நெல் அறுவடை பண்ணயிருந்தார். அவரிடம் விசாரித்து பார்த்த போது, ரசாயன உரங்களைப் போடாமல், அதிகமான இலை தழைகளைப் போட்டு சாகுபடி செய்ததாக சொன்னார். அந்த அரிசியில் சமைத்த சாப்பாடும் நல்ல மணமாக இருந்தது. அப்போதுதான் நிலத்திற்கு சத்து கொடுக்கணும் என்ற நினைப்பு வந்தது. அதற்குப் பிறகு நான், ரசாயன உரங்களைக் குறைத்துக் கொண்டு, இலைதழைகளையும், எருவையும் அதிகமாக பயன்படுத்த ஆரம்பித்தேன்.
மூன்று வருடத்திற்கு முன் திருவண்ணாமலையில் நடந்த 'ஜீரோ பட்ஜெட்' இயற்கை வேளாண்மை பயிற்சியில் கலந்து கொண்ட பிறகு தான், முழுமையான இயற்கை விவசாயத்தைப் பற்றி தெரிந்து கொண்டேன். உடனே, ரசாயன உரங்களை தூக்கிப் போட்டுவிட்டு, முழுமையாக இயற்கை விவசாயம் பக்கம் திரும்பினேன். ஆரம்பத்தில் பெரிய அளவில் மகசூல் இல்லை. அடுத்தடுத்த போகங்களில் மகசூல் அதிகரித்தது. இயற்கை முறையில் விளைந்த அரிசியைத் தொடர்ந்து சாப்பிடுவதால், 'சுகர்' பிரச்னையும் குறைந்துவிட்டது.
இப்போது என்னிடம் மொத்தம் 16 ஏக்கர் நிலமிருக்கு. அதில் 6 ஏக்கர் சொந்த நிலம், 10 ஏக்கர் கோயில் நிலம். 3 ஏக்கரில் கரும்பு, 13 ஏக்கரில் நெல் சாகுபடி நடக்கிறது. இந்த போகத்தில், வெள்ளை பொன்னி, ஆந்திரா பொன்னி ரகங்களோடு 2 ஏக்கரில் தூயமல்லி சாகுபடி செய்திருக்கிறேன். தூயமல்லி ரகத்தோட சிறப்பு என்னவென்றால்...இதில் நெல்லு கதிர், சோளம் மாதிரி வெள்ளையாக இருக்கும். அரிசியும் மணமாக, சுவையாக இருக்கும் என்றார்.

**ஏக்கருக்கு 8 கிலோ விதை!**

தூயமல்லி ரகத்தின் வயது 145 நாட்கள். ஆடிப் பட்டத்திற்கு ஏற்றது. ஒற்றை நாற்று முறையில் நடவு செய்ய, ஏக்கருக்கு எட்டு கிலோ விதை தேவைப்படும். விதைநெல்லை சணல் சாக்கில் கட்டி 20 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு, வெளியில் எடுத்து, தண்ணீரை வடித்து, 24 மணிநேரம் இருட்டில் வைத்து, மூன்றுநான்கு முறை தண்ணீர் தெளித்துவிட வேண்டும். பிறகு, 20 லீடடர் பீஜாமிர்தக் கரைசலில் இரண்டு மணிநேரம் ஊற வைத்து எடுத்து, விதைக்க வேண்டும்.

**ஏக்கருக்கு 5 சென்ட் நாற்றங்கால்!**

ஒரு ஏக்கருக்கு 5 சென்ட் நிலம் என்ற கணக்கில் நாற்றங்காலுக்காக ஒதுக்கி... அதில் 15 கட்டு இலை, தழைகளை இட்டு உழவு செய்து, தண்ணீர் கட்டி 10 நாட்கள் விடவேண்டும். இலைகள் நன்கு அழுகிய பிறகு, மூன்று சால் உழவு செய்து சேறாக மாற்றி, சமப்படுத்திக் கொள்ள வேண்டும். நாற்றங்காலில் நான்கு விரல்கள் உயரத்திற்கு தண்ணீர் நிறுத்தி, விதைகளைத் தூவ வேண்டும். 12 மணிநேரம் கழித்துத் தண்ணீரை வடிக்க வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் வரை, தண்ணீர் கட்டி ஒரு மணி நேரம் வைத்திருந்து வடித்துவிட வேண்டும். அதற்கு பிறகு, தொடர்ச்சியாக தண்ணீரை நிறுத்தலாம்.

4-ம் நாளில் 4 கிலோ கடலைப் பிண்ணாக்கை, 2 லிட்டர் தண்ணீரில் 10 மணிநேரம் ஊற வைத்து கொழகொழப்பாக மாற்றி, அதோடு 20 கிலோ மணலைக் கலந்து தூவ வேண்டும். 5-ம் நாளில் 100 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலை தண்ணீரில் கலந்துவிட வேண்டும். 15-ம் நாள் அரை அடி உயரத்திற்கு வளர்ந்து நாற்றுத் தயாராகி விடும்.

**அடியுரமாக இலைகள்!**

நாற்று தயாராகிக் கொண்டிருக்கும் சமயத்திலேயே நடவிற்கான வயலையும் தயார் செய்துவிட வேண்டும். ஏக்கருக்கு ஒரு டிராக்டர் எருவைக் கொட்டி கலைத்துவிட வேண்டும். பிறகு, ஆற்றோரங்களில் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டாமணக்கு உள்ளிட்ட தாவரங்களின் இலைகளை ஏக்கருக்கு 6 டன் அளவிற்கு இட்டு… உழவு செய்து, தண்ணீர் கட்டி பத்து நாட்கள் வைத்திருக்க வேண்டும். பிறகு, நான்கு சால் டிராக்டர் உழவு செய்து, சேறாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஓரடி இடைவெளியில் கயிறு பிடித்து, அரையடி இடைவெளியில் குத்துக்கு இரண்டு நாற்றுகள் (ஒன்று பழுது போனாலும், மற்றொன்று பிழைத்துக் கொள்ளும்) வீதம் நடவு செய்ய வேண்டும்.
நடவு செய்த 15 மற்றும் 30-ம் நாட்களில் 'பவர் கோனோவீடர்' மூலம் களைகளை அழுத்திவிட வேண்டும். 30-ம் நாளுக்குப் பிறகு விடுபட்ட களைகளை ஆட்கள் மூலம் நீக்கிவிட வேண்டும். நடவு செய்த 15-ம் நாளிலிருந்து தொடர்ந்து.. 15 நாட்களுக்கு ஒரு முறை 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலை தண்ணீரில் கலந்து விட வேண்டும். அதே நேரத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை… ஒரு டேங்கிற்கு (10 லிட்டர்) ஒரு லிட்டர் ஜீவாமிர்தம் வீதம் கலந்து, ஏக்கருக்கு 10 டேங்க் வரை இலை வழித் தெளிப்பாகவும் தெளிக்க வேண்டும். இதனால், பூச்சி, நோய் தாக்குதல்கள் இருக்காது. அப்படியும் பூச்சிகள் தென்பட்டால், ஒரு டேங்கிற்க்கு 30 மில்லி வீதம் மூலிகைப் பூச்சிவிரட்டியைக் கலந்து தெளித்தால் போதும். 50-ம் நாளுக்குப் பிறகு சிம்புகள் வெடித்து வளரும். 95-ம் நாளுக்கு மேல் கதிர் பிடித்து… 125-ம் நாளில் தண்ணீர் கதிர் முற்றத் தொடங்கி விடும். 135-ம் நாளில் தண்ணீர் கட்டுவதை நிறுத்திவிட்டு, 145-ம் நாளுக்கு மேல் அறுவடை செய்யலாம்.

ஒவ்வாரு தூரிலும் இருபதிலிருந்து இருப்பதைந்து சிம்புகளும், சிம்புவிற்கு நூற்றி நாற்பதிலிருந்து நூற்றைம்பது மணிகளும் இருக்கு. ஏக்கருக்கு 20 மூட்டை (80 கிலோ) நெல் கிடைக்கிறது. இரண்டு வருடமாக அரிசியாகத்தான் விற்பனை செய்கிறேன்.
80 கிலோ நெல்லை அவித்துக் காய வைத்து அரைத்தால்… 50கிலோ அரிசி கிடைக்கும். 20 மூட்டை நெல் மூலமாக 1,000 கிலோ அாசி கிடைக்கும். கிலோ 50 ரூபாய் என்று விற்றால்… 50 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். செலவு போக எப்படியும் ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் கிடைத்துவிடும் என்றார்.

**தொடர்புக்கு : தாந்தோணி, செல்போன்: 93814 – 57817**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.12.12 www.vikatan.com***